# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௩௭ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௨<br>பிலவ, ஆனி.<br>1961 ஜூன், ஜூலை. | மலர் ௩ |
|---|---|---|


## தன்னை யறிதல்


[புலவர் திரு. வி. சச்சிதானந்தம், சோழவந்தான்]


மனித இனம் பல கோடிக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே தோன்றி, வளர்ந்து, சிறப்புற்று வந்துளது. தனது வாழ்வுக்கான பலவற்றையும் வகுத்து, வகுத்தபடி வாழக் கற்று வளமுற்றிருப்பதும் மனித இனமே. சுற்றுப்புறச் சூழ் நிலையை அறிந்து, உணர்ந்து ஒதுங்கியும், ஒதுக்கியும் வாழ்ந்து பல்லாண்டுகள் நிலைபெற்று வாழ முடியும் என்பதை நிலை நிறுத்தியதும் மனித இனமே. விலங்கோடும், பறவையோடும் வேறுபாடின்றிக் கலந்து வாழ்ந்து வந்த மனிதன் விரைவில் விலங்குகளால் மாளும் நிலையை அறிந்தான். விலங்கை அழிக்கத்—தன்னைப் பாதுகாக்க அறிவைப் பயன் படுத்தி அழிக்கும் கருவிகளைக் கண்டு பிடித்தான். முதன் முதலாகக் கூரிய கல்லினைக் கொண்டே பிறவுயிரைக் கொன்று வந்த மனிதன் சிந்தனையை வளர்த்து வில்லையும், அம்பையும், வேலையும், வாளையும் கண்டு பிடித்தான். காட்டு விலங்கைக் கொல்வதற்கென ஏற்பட்ட கருவிகளால் நாட்டில் வாழும் மனிதனையும் கொல்ல ஆரம்பித்தான். தன்னை முற்றும் அறியாத காரணத்தால் பிறரை அழிப்பதிலே நாட்டம் செலுத்தினன். தன்னை அறிவதற்குப் மாற்றாகத் தன்னலம் மனிதனிடம் குடி கொண்டது. அறத்தை மறந்தான். பகையும், போரும், நம்பிக்கையற்ற தன்மையும் நாட்டிலே தோன்றின. நல்லருளாளர் தோன்றி விலங்கினத்திற்கும், மனித இனத்திற்கும் உரிய வேறுபாட்டை உணர்த்தி அன்பையும், அறத்தையும், அறிவையும் பெருக்கிவந்தார்கள். தன்னையறிவதால் ஏற்படும் நன்மையைத் தாம் வாழ்ந்து காட்டி உணர்த்தினார்கள். காணக் கூடிய பொருளிலே மட்டுமின்றி—காணாத—காணமுடியாத பொருளிடத்திலும் கருத்தைச் செலுத்திக் கசிந்துருகும் பழக்கத்தையும் உண்டு பண்ணினார்கள். அறிவின் முதிர்ச்சியும்

அனுபவ நிறைவும் கொண்டு மனிதன் வாழப் பிறந்தவன் என்பதை உணர்ந்தான்; அறிந்தான்; உரைத்தான். கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்த்தான். குடும்பமாக வாழ்ந்து, ஊர்கண்டு, நகரம் கண்டு, நாடுகண்டு உயர்ந்த இன்பமும் கண்டான். மனித வாழ்விற்கெனவே அரசியலும், சட்டமும் தோன்றின. படிப்படியாக மனிதன் பண்பட்டுவரினும் பண்டைய விலங்கு மனம் அவனை விட்டபாடில்லை. அறிவியலுணர்வால் அரும்பெரும் சாதனைகளைக் கண்ட இருபதாம் நூற்றாண்டிலே புறநாகரிகம் வளர்ந்து பொய்யும், பொறாமையும், போரும் பிணக்கும் பெருகி விட்டன. அறிவு பெருகி உள்ளம் சிறுத்து விட்டது. ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீதும், ஒரு ஊரார் வேறொரு ஊரார் மீதும், ஏன்? ஒரு மனிதன் மற்றொரு மனிதன் மீதும் நம்பிக்கையிலாத நிலை ஏற்பட்டு விட்டது. இதனால் கவலையும், அச்சமும் கணக்கின்றிப் பெருகி விட்டன. இந்நிலை நீங்கி நாடு நன்னிலையடைய வேண்டுமானால் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அது தான் இக்காலத்திற்கும், எக்காலத்திற்கும் மனிதன் ஒன்றுபடுவதற்குரிய தலையாய பண்பாகும்.

'தன்னையறிதல்' என்பது தன்னுடைய தகுதியை—பெருமையை—நிலையை ஆராய்ந்து அறிதல் என்னும் பொருளுடையதாகும். தன்னைப் பற்றி நன்கு அறிந்து கொண்டவன் தான் உலகைத் திருத்த—உயர் நிலைக்குக் கொண்டுவர முடியும். வாழும் நூல் செய்த வள்ளுவனார் மனிதன் தன்னை அறிந்து நடக்கும் பண்புகளையே பலவாறாகத் தொகுத்துக் கூறியுள்ளார் என்பதை நுணுக்கமாக ஆராயின் நன்கு புலனாகும். வள்ளுவர் சொல்லிற்கு மதிப்பு தரமாட்டார்; செயலுக்குத் தான் மதிப்பு தருவார். 'வினைவேறு சொல்வேறுபட்டார் தொடர்பு கனவினும்' இன்னாதது என்பதால் அறியலாம். உலகில் படிப்பவர்கள் பலர்; உணர்பவர்கள் பலர்; பிறர்க்கு உரைப்பவர்கள் பலர். ஆனால் தாம் மட்டும் அடங்கி நடப்பவர்கள்—தன்னை அறிந்தவர்கள் ஒரு சிலரேயாவர்; தானடங்காதவர்களாகிய அவர்கள் பேதையினும் பேதையர்களாகக் கருதப்படுவர் என்று உரைக்கின்றார்.

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"— என்பது குறளாகும்.

தன்னைப் பற்றி நினைக்காதவர்களே அடுத்தவர்களைப் பற்றிக் குறை கூறுவார்கள். மக்கள் குறையுடையவர்களே; குறையிலா மக்களைக் காணமுடியாது. குறைகாணின் எடுத்துக் கூறி அன்பு முறையில் திருத்துவதே சிறப்புடையதாகும். குறை குறை என்று அறைகூவிச் சொல்பவரும் குறைபாட்டிற்கு உரியவர்களாகிறார்கள். இதனால் அழுக்காறும், அவாவும்,

வெகுளியும் பெருகித் தீங்குகள் ஏற்படுகின்றன. மேன் மேலும் தீமைகளும், குறைகளும் பெருகுவதற்கே குறை கூறும் நிலை காரணமாகின்றது. எனவே ஒருவன் தன்னுடைய குற்றத்தை —தன்னை—உணர்ந்து பார்ப்பானேயானல் அடுத்தவரைக் குறை கூறான்; எவ்வுயிர்க்கும் தீங்கு நேரிடாது என்ற கருத்துக்களை அமைத்து,

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு" — என்ற குறளில் அழகுற

எடுத்துக் காட்டியுள்ளார்.

நாட்டிலே தோன்றும் கேடுகட்கு—அழிவுகட்குக் காரணம் வெகுளியே யாகும். வெகுளி தோன்றக் காரணம் அழுக்காறு. அவா ஆகிய இரண்டுமாகும். எவனுள்ளத்தில் அழுக்காறும், அவாவும் நீங்குகிறதோ அவனிடம் அன்பும், பண்பும், குடி கொண்டிருக்கும். தன்னைப் போல பிறவுயிரையும் கருதுவான்; துன்பம் துடைப்பான்; பாதுகாப்பான். எனவே அவனுக்கும் தீங்கு நேராது; இறுதி வராது. சினம் வராமற் பாதுகாப்பதே நன்மைக்கு அறிகுறியாகும். இந்நிலை தன்னை யறிந்தவனுக்கே உண்டாகும் என்பதைத்,

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" — என்ற குறளில் கூறுகிறார்.

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் புகழோடு வாழ வேண்டும். புகழிலாத உடலைத் தாங்குவது நிலத்திற்குச் சுமையேயாகும். 'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' என்றும் வள்ளுவர் கூறுகின்றார். புகழும் பெருமையாக வாழ்ந்தால்தான் வரும். பெருமையும், கடமையுடன் வீட்டார்க்கும், நாட்டார்க்கும் தொண்டு பலவற்றை அன்புடன் செய்து, நினைவு, சொல் செயல், ஆகியவற்றை ஒன்றுபடுத்தி வாழ்கின்றவனுக்கே உண்டாகும். முதன் முதலில் உள்ளமும், உடலும் யாரிடம் ஒன்றுபட்டதோ அவரை விட்டு என்றும், எந்நிலையிலும், அவர் வேறுபடினும் தாம் மாறுபடா. பிறரால் கவர்ச்சியுறாத—கவரப்படாத நிறையுடைய ஒருமையுடைய நல்ல பெண்ணைப்போல ஒரு மனிதன் உலகிடைத் தொண்டு செய்து ஒழுகிவரின் பெருமையுண்டு—அவனே தன்னையறிந்தவனாவான்; அவனுடைய அறிவினால் மாநிலத்து மன்னுயிர்க்கட்கே மகிழ்வு ஏற்படும். இக் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிய குறளினைக் காண்போம்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"

என்பது அக் குறளாகும்.

இதுவரை ஒருவன் தன்னையறிவதால் அடையக் கூடிய பயன்களை அறிந்தோம். இனித் தன்னையறியாததால் ஏற்படும் நிலையினை ஆராய்வோம்.

செல்வர்கள், தாங்கள் யார்? தமக்கு எவ்வாறு செல்வம் கிடைத்தது? தமது செல்வத்திற்குத் தம் பங்கும், பிறர் பங்கும் எவ்வளவு? தொழிலாளியின்றேல் முதல் வைத்து வாழ முடியுமா? என்றெல்லாம் எண்ணிப்பார்த்துச் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை உணர்ந்து, பணம் படைத்தவர்கள் எல்லோரும் நல்ல குணம் படைத்திருப்பார்களேயானால் நாட்டிலே பஞ்சம் ஏது? பட்டினி ஏது? வேற்றுமை உணர்வுகள் தாம் ஏது?

ஏழைகள், தாங்கள் ஏன் ஏழைகளாகவே இருக்கின்றோம்? வருவாய் எவ்வளவு? ஆடம்பரத்திற்கும், திரைப்படத்திற்கு மாக வீணான செலவுகள் எவ்வளவு? தாம் அடிமையாக இருக்கக் காரணம் என்ன? உலகத்திற்கே முதற்காரணமான உழைப்புச் சுரண்டப்படுவதன் காரணம் என்ன? முதல் கொடுத்து உதவுவோர்க்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? தங்கட்கும், தங்கள் முதலாளிகட்கும் ஏற்படக் கூடிய வேறுபாட்டால், பொதுமக்களை ஊறுபடுத்தக்கூடிய வேலைநிறுத்தம் செய்வது தகுமா? என்றெல்லாம் சிந்தித்து இருப்பார்களேயானால் போரும், பிணக்கும், வேற்றுமையும் நாட்டிலே தோன்றியிருக்குமா?

பெண்கள் அழகு வடிவானவர்கள்; அன்பு மயமானவர்கள், அருள்தன்மை உடையவர்கள்; தங்களைப் போன்று உரிமையோடு வாழத் தகுதியுடையவர்கள்; தங்கட்கு எவ்வாறு மறுமணம் செய்துகொள்ளும் விருப்பமும், வாய்ப்பும் உண்டோ அதுபோல விதவைப் பெண்களும் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ளும் உரிமையுடையவர்கள்; குடும்பத்தையும், நாட்டையும் நல்வழிப்படுத்தும் ஆற்றலுடையவர்கள்; எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாகிய—அறிஞர்களாகிய குழந்தைகளை ஈன்று வளர்க்கும் சிறப்பும் பொறுப்பும் உடையவர்கள்; இறைமைக் குணங்கள் யாவும் கொண்டவர்கள் என்றெல்லாம் எண்ணி ஆடவர்கள் நடந்திருப்பார்களேயானால் பெண்ணடிமை நாட்டிலே தோன்றித் தமிழகம் தாழ்ந்த நிலையை அடைந்திருக்குமா?

வாழ்க்கைத் துணைவி என்பதன் நுட்பம் யாது? வருவாய்க்கேற்ற சிக்கனமான—சீரான வாழ்வினை நடத்துவது எப்படி? எதிர்காலக் குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது? ஆடவர்களிடம் குறைகாணின் அன்பு வழியில் அவர்களைத் திருத்துவதற்கு வழி என்ன? காதலன் கருத்திற்கேற்ப நடப்பதால் ஏற்படும் நன்மை யாது? உரிமையின்பால் ஏற்படும்

ஊடலைத் தவிர வேறு பிணக்குகள் ஏற்படாதவாறு பாது காப்பது எப்படி? பெண்ணடிமையும், அனாதை நிலைகளும் ஏற்படக் காரணம் என்ன? மொழியும், இனமும் இழிநிலையுற்ற தற்குக் காரணம் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லாததன் விளைவு தானே? என்றெல்லாம் பெண்கள் சிந்தித்துப் பார்த் திருப்பார்களேயானால் அச்சந்தரும் அனாதைக் கூட்டங்களும், சீர்குலைந்து மாறுபட்ட குடும்பங்களும், இளமைத் திருமணமும், விரும்பாத மணமுறைகளும், நாட்டிலே ஏற்பட்டிருக்குமா?

ஆகவே செல்வர்களும், ஏழைகளும், ஆடவர்களும், பெண்களும் தங்களை உணர்ந்து, அறிந்து நடந்திருந்தால், நாளுக்கொரு நீதி மன்றங்களும், வழக்குரைஞர் கூட்டமும், போர் அச்சமும் நம்பிக்கையற்ற தன்மையும் ஏற்பட்டிருக் காது என்பது விளங்கும். இவ்வளவு முறைகேடுகளும் நாட்டிலே நிறைந்திருக்கக் காரணம் ஒவ்வொருவரும் தன்னை யறியாததேயாகும் என்று உளம் வருந்தி இறைவனிடம் முறை யிடுகின்றார் அருளே உருவாய நமது இராமலிங்க அடிகளார்.

> " அன்னையே அப்பா திருச்சிற்றம்பலத் தென்ஐயனே இவ்வுலகதிலே
> பொன்னையே உடையார் வறியவர் மடவார் புகலும் ஆடவர் இவர்களுக்குள்
> தன்னையே அறியாப் பிணியினால் ஆவிதளர்கின்றார் தருணம் ஈதெனவே
> சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த சோபத்தைநீ
> யறியாயோ "

என்ற பாட்டில் தன்னையறியாமல் வாழ்வது நோயென்று கூறி, கவலைகளுக்கெல்லாம் முதற்காரணம் தன்னையறியாத தன்மையே யாகும் என்பதைச் சுட்டிக் காட்டி, தன்னையறிய வேண்டுவதன் சிறப்பை உணர்த்தும் வள்ளலாரின் திறம் மிகவும் வியத்தற் குரியதாகும்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்கின்ற உலகில் தன்னையறிந்து வாழ்பவர்கள் ஒரு சிலரேயாவார். ஆயிரம் ஆண்டுகட்கு ஓர்முறை நல்லருளாளர் தோன்றி நாட்டைச் செம்மைப் படுத்துவார்கள் என்பது நம்மனோர் வாக்கு. பெண்ணோடு கூடிவாழ்ந்து, நல்லறங்களை இயற்றி, நல்ல பல பண்புகளைப் படிப்படியாக வளர்த்துத் தற்பற்றும், தன்வீட்டுப் பற்றும் சிறிது சிறிதாகக் குறைவுபெற்று, நாட்டுப்பற்றும் உலகப்பற்றும் ஓங்கப்பெற்று, தொண்டு செய்யும் தன்மை யுடையவனே தவமுடையவனாவான். அவனே தன்னுயிர் தானறப் பெற்றவனாவான். அவனை—தன்னையறிந்தவனை ஏனைய உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழும். இதனை,

> " தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
> மன்னுயி ரெல்லாந் தொழும் " —என்ற குறள் தெளிவுறுத்தும்.

மீண்டும் நாட்டிலே ஏசுகிறித்து, முகமது நபி, திருவள்ளுவர், வள்ளலார், காந்தி, திரு. வி. க. போன்றவர்கள் தோன்ற வேண்டுமானால் தன்னையறிதலாகிய பண்பினை மேற்கொண்டு

நடக்கப் பயிலுதல் வேண்டும். தன்னையறிந்தவராகிய வள்ளலாரே வெண்ணிலாவை நோக்கி,

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே"—
என்று கூறுகின்றார்.

ஒருவன் தன்னையறிந்தால் கேடு வராது; அறியாததனாலேயே கெடுகிறான்; அறியும் அறிவை ஒருவன் அறிந்து கொண்டால் அகத்திலே இருக்கும் உண்மையான இறைவனை—இறைத் தன்மையை அறிந்து வழிபட—அருச்சிக்கத் தொடங்குவான்" —என்று "தன்னையறிதலாகிய சிறப்புக்களை யெல்லாம் தொகுத்துத் திருமூலர் ஒரே பாட்டிலே கூறியிருப்பது அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை அறிந்துபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே"—
என்பது திருமந்திரம்.

இதுகாறும் கூறிய வாற்றால், மக்கள் பண்டு தொட்டு பண்பட்டமுறை இவ்வாறு என்பதும், 'தன்னை யறிதல்' என்பதற்குரிய பொருள் இன்னது என்பதும், குறை கூறும் தன்மையும், வெகுளி தோன்றும் நிலையும், பெருமையை உணர்ந்து நடக்கும் திறமையும், செல்வர்கள், ஏழைகள், ஆடவர்கள், பெண்கள் ஆகியோரெல்லாம் துன்பப்படுதற்குக் காரணம் தன்னையறியாத நிலைமையாலே ஆகும் என்பதும், மொழி, இனம் தாழ்வதற்குரிய காரணம் இன்னது என்பதும், நல்லவர்கள் தோன்றுவதற்குக் காரணம் இதுவென்பதும், திருவள்ளுவர், வள்ளலார், திருமூலர் ஆகிய பெரியோர்கள் "தன்னையறிதலாகிய" நிலையைப் பற்றி என்ன கூறினார்கள் என்பதும் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். எனவே ஒவ்வொருவரும் தன்னையறிந்து அடுத்தவர் குறை காணாது, அன்பும், அறமும், அருளும் பெருக வழியுணர்ந்து, பெண்ணடிமை நீக்கிப் பொய்யும், பொறாமையும் பூசலும் விலக்கி, அறிவோடு கூடிய செயல்பல புரிந்து, ஒத்தாரும், தாழ்ந்தாரும், உயர்ந்தாரும், எல்லாரும் ஒத்து உலகியலில் வாழ்க்கை நடாத்துவதற்கான வழி பல வகுத்து வாழுதல் வேண்டும். வள்ளுவர் குறளைப் படியுங்கள்; வள்ளலார் வாக்கை உணருங்கள்; பெரியார்கள் சொற்களைப் பேணுங்கள். தன்னை யறிந்து வாழ்வாங்கு வாழுங்கள். தன்னையறிந்து பிறரையும் வாழவைப்பதற்கெனவே இறைவனால் மனிதன் படைக்கப் பட்டான் என்பதை உணர்ந்து நடத்தலே நல்ல வாழ்க்கைக்கு —சிறந்த வாழ்க்கைக்குச் சான்றாக அமையும்.

சென்ற இதழின் தொடர்ச்சி :

# அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனார்,

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

இவ்வாறு, இன்று பண்டைய இலக்கியங்களால் அறியப் பெறும், தமிழகச் சிற்பவோவியக் கலைகள் இறந்த காலத்தில் மறைந்தொழிந்தனவாயினும், அவற்றின் சுவட்டின்மேல் 'பெருமழை பெய்தபின் பிசிரிட்டு நிற்கும் சிறு முகில் போல்' எழுந்து நின்றவையும், பகைமேற் செல்லும் படைகளின் சினத்தாலும், சிற்பந்தாக்கிகளின் மத வெறியாலும் ஓரளவு சிதைக்கப்பட்டன. அப்பொல்லாக் கொள்ளைகளினின்றும் எஞ்சி நின்று சென்ற காலத்தின் சிறந்த கதைகளைச் சிற்ப ஓவியமாக நின்று உரைப்பனவற்றுள், தமிழகத்தின் கலைச் செல்வங்களுள் ஒன்றான சிற்றண்ணல்வாயில் மலையில் குடை தளியாக அமைந்து நிற்கும் அறிவன் கோயிலும் ஒன்றாகும்.

## 5. சிற்றண்ணல் வாயில் :

தஞ்சைக்குத் தெற்கேயுள்ள புதுக்கோட்டை நகரிலிருந்து மேற்கே அன்னவாசல் என்றழைக்கப்பெறும் சிற்றூர் வழியாகத் திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் பெருவழியில் சரியாக ஒன்பது கல் சென்றவுடன் நேர்வழியினின்றும் கிழக்கு நோக்கிச் சிறுவழியொன்று செல்லுகிறது. செப்பமாகவுள்ள அவ்வழியே ஒரு கல் தொலைவு சென்றால், சிற்றண்ணல் வாயில் மலையை அடையலாம். அன்று ஊரிற்கு அமைந்தபெயர், இன்று மலையளவில் குறிப்பிடப்பட்டு வருகிறது. ஊர் இருந்த தென்பதற்குரிய சின்னங்களே தெரிகின்றன.

இம்மலை வரலாற்றில் மிகவும் தொன்மையிடம் பெறத் தக்கது. கி. மு.—இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி.—மூன்றாம் நூற்றாண்டளவிலும் தமிழகத்தில் பெருகிவந்த பிராமி (பாலி மொழி) எழுத்துக்களாலான கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுதலே இதற்குச் சான்றாம். மற்றும், இம்மலையிலுள்ள மனிதன் வாழ்வதற்கேற்ற அமைப்புடைய இயற்கைக் குகைகளில், பௌத்த பிட்சுக்களும் சமணத்துறவிகளும் அவ்வக்காலங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே இம்மலைக்குச் 'சித்தர் மலை' என்றும் பெயர் வழங்கி வருகிறது.

கி. பி. 6, 7—ஆம் நூற்றுண்டளவில் இருக்குவேளிர் என்னும் மரபுடைய மன்னர்களும், கி. பி. 8, 9—ஆம் நூற்றுண்டுகளில் முத்தரையர் என்னும் அரசர்களும் புதுக்கோட்டை நகரைச் சார்ந்த பகுதிகளைக் 'கோனாடு' என்று பெயரிட்டு ஆண்டு வந்தனர். அக்கோனாட்டின் மேலைப்பகுதியிலேயே சிற்றண்ணல் வாயில் அமைந்துள்ளது. கி. பி. 10, 11—ஆம் நூற்றுண்டுகளில் சோழநாட்டை ஆட்சி புரிந்த சோழ மன்னர்களது கல்வெட்டுகளில், இந்நிலப்பரப்பு 'இரட்டபாடி கொண்ட சோழமண்டலத்திலுள்ள அண்ணல் வாயில் கூற்றம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விருபதாம் நூற்றுண்டில், புதுக்கோட்டை சீமை, குளத்தூர் தாலுகாவிலுள்ள சித்தன்ன வாசல் என்னும் மலையாகச் சுட்டப்பட்டுவருகிறது. நாட்டின் பகுதி 'அண்ணல் வாயில் கூற்றம்' என்றும், ஊர் 'அண்ணல் வாயில் அறிவன் கோயில்' என்றும் கல்வெட்டுகளால் அறியப்படுவதிலிருந்து இவ்வூர் சமணரின் வரலாறு கொண்டதென்பது பெறப்படும்.

இம்மலைக் குகையிலுள்ள கற்படுக்கை யொன்றில் காணப்படும் பிராமிய கல்வெட்டில் 'சி(த்)து போசில்' என்று குறிப்பிடுவதைக் கொண்டு, இப்பகுதி சித்தர் இருப்பு அல்லது சித்தர் குகை என்று அழைக்கப் பெற்றமை தெளிவாம்.

### 6. ஊரும்—மலையும் :

அண்ணல் வாயில் என்பது பெரிய ஊர். அதனைச் சார்ந்து நிற்பது மலையும் துறவிகள் இருப்புமாகிய பகுதி. இச் சிறுபகுதியை அண்ணல் வாயிலினின்றும் பிரித்துச் சுட்டிய மக்கள், சிறிய அண்ணல் வாயில் அல்லது சிற்றண்ணல் வாயில் என்று முறையாக அழைத்திருக்கலாம். அதுவே காலப்போக்கில் சாலை மறைந்து பாட்டையாகியதைப் போல் சிற்றண்ணல் வாசல் என்றாகி, பின்னர் சித்தன்ன வாசல் ஆகியது போலும்! அன்றி, நாளடைவில் ஒலியாலும் குறியாலும் குறைத்து வழங்கப்பட்ட அன்னவாசலுடன், சித்தர் இருப்பையும் சேர்த்துச் சுட்ட முயன்ற மக்கள், சித்தர் அன்ன வாசல் என்றும், பின்னர் சித்தன்ன வாசல் என்றும் சிதைத்து அழைத்திருக்கக் கூடும்!

---

[கி. பி. 11—ஆம் நூற்றுண்டில் விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தை, இன்று அங்குள்ள மக்கள் கெங்காண்டரம் என்று சிதைத்துக் கூறுவதும், தேவாரம் பெற்றச் சிவத்தலமாம் திருப்பராய்த்துறையை, திருப்பளாத்துறை என்றே மாற்றி அழைப்பதும், திருப்பாதிரிப் புலியூரை திருப்பாபுலியூர் என்று குறைத்துக் கூறுவதும், திருத்தவத்துறை லால்குடி என்று முற்றும் மாற்றுருவில் நிற்பதும், ஹாம்ப்டன் வாராவதி இன்று அம்பட்டன் வாராவதியான புதுமையும், ஈண்டு ஒப்பிட்டு சிந்திக்கத் தக்கவை.]

புழக்கத்தால் தேய்ந்து உருவழிந்த பழைய நாணயம், பன்னெடு நாட்கள் மண்ணில் புதையுண்டபின் அடையும் நிலைபோலச் சிதைந்து நிற்கும் சித்தன்னவாசல் என்னும் ஊர்ப்பெயரின் முழு வடிவையும், அடிச் சுவட்டைக் கொண்டு ஆள் அறியும் அருமையுடன் ஆராய வேண்டியுளது.

### 7. மலையின் தோற்றம் :

நில மலைகளின் சிறப்பான அமைப்புக்களில் மலைகளின் தோற்றங்களிலும் புதுமை உண்டு. சிற்றண்ணல் வாயில் மலையின் பெருமிதத் தோற்றம் நெடுமால் பள்ளிகொண்டதைப் போல் தெற்கு வடக்காக நீண்டு கிடக்கின்றது. இந் நெடிய தோற்றத்தினைப் பெரிய திமிங்கில வடிவிற்கும் ஒப்பிடலாம்.

இக்குன்றின் அழகை கிழக்கே நின்று பார்ப்போமாயின், அதன் இடைப் பகுதியாகும் பாறையமைப்பால் ஒரு அன்னப் பறவை அமர்ந்துள்ளதைப் போன்று காட்சியளிக்கிறது. தலையாக நிமிர்ந்து உயர்ந்து குறுகும் சரிவில் பிளவுபட்ட வாய் போன்ற குகையொன்று (சமணர் குகை) அமர்ந்திருப்பது இயற்கையின் விந்தையை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.



நீண்டு உயர்ந்து அமைந்துள்ள இக் குன்றின்மேல் தளத்தின் நான்கு திக்கிலும் வெடிப்பொத்த நீண்ட பள்ளத்தாக்குகள் அமைந்துள்ளன.

அப்பள்ளமான குறுகிய பகுதிகளில் மரங்களும் செடிகளும் புதர்களும் மல்கி நிற்கும் காட்சி மாட்சிமை உடையது.

### 8. மலை வழிகள் :

மலைமீது ஏறுவதற்கு மூன்றே வழிகள் உள்ளன. அவை, வடகோடிச் சரிவு, கிழக்குச் சரிவு, தென்கோடி இறக்கம் என்

பனவாம். முதலிரண்டு வழிகளும் கரடுமுரடானவை. தென் கோடியில் அமைந்துள்ள இறக்கமான வழியே புழக்கத்தில் இருந்து வருகிறது. இவ்வழி தரைமட்டத்திற்கு மேல் முந் நூறடி அளவில் உயர்ந்து செல்லுகிறது. அதிகச் சரிவில்லா மல் படிப்படியாக அமைந்துள்ள பாறைத் தளங்களும், பிளவு களும், இடுக்குகளுமே இப்பாதையின் அமைப்பாகும். புதை பொருள் கழகத்தார் இப்பாதையின் தொடர்ச்சியைப் பாறை களின் மீது சுண்ணக் கோடிட்டுக் காண்பித்துள்ளனர். மலை மேல் செல்ல விழைவோர் இச் சுண்ணக் கோடுகளை வழிக் கொண்டே செல்லுதல் வேண்டும்.

சிற்றண்ணல் வாயிலில் பழமை பேசும் புதுமையுடன் அமைந்துள்ள இடங்கள், மலையிலுள்ள சமணர் கற்படுக்கை, ஏழடிப்பட்டம், கரடிக்குகை, காவல் பள்ளி, நாவல் சுனை, அறிவன் கோயிலாகிய குடைதளி, என்பனவற்றுடன், மலையின் சூழலில் காணப்படும் சிவனூர் கோட்டம், ஐயனூர் படிமம், சமணர் புதைவடை, குரங்குப்பட்டை ஆகியவைகளுமாகும்.

மலையிலும் சூழலிலும் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப் புடைய இப் பகுதிகளைச் சென்று காண்பதற்கு இலகுவான வழியமைப்புள்ள முறையிலேயே எடுத்துக் கூறுதல் சிறப் புடையதாகும்.

### 9. கரடிக்குகை :

சிற்றண்ணல் வாயில் மலையின் மேற்குப் புறத்தில் தொடர்ந்து செல்லும் சாலை, புதுக்கோட்டையினின்றும் திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் தலைமைச் சாலையினின்றும் இம்மலைக்குப் பிரியும் மண்சாலை என்று முன்னர் கூறினோம். மலையின் தென்கோடி இறக்க வழியருகே திருப்பமாகத் தொடரும் இச்சாலையின் வலப்புறமும், மலையின் அடிவாரமு மாகிய இடம் கரடுமுரடான பாறைத் தளத்தோடு கூடிய அடர்ந்த முட்புதர்களோடு அமைந்துள்ளது. இவ்வடிவாரப் பகுதியில் முதலாவதாகக் காணக்கிடைப்பது குலாலரின் கைத்திறனாலாகிய குதிரைகளும், செங்கல் சுண்ணம்பால் சிறந்து நிற்கும் யானையும் சூழநிற்கும் ஐயனூர் கோயிலாகும். இக்கோயில் திட்டாக அமைந்துள்ள செறிந்த புதர்களிடையே வளர்ந்து படர்ந்து நிற்கும் மகிழமரங்களோடு கூடிய அடவி யினுள் அமைந்துளது. இப் பகுதியைக் கடந்து சிறிது வழிக் கொள்ளின் மலையின் உடற்பகுதி நேராகத் தோன்றும். இப் பகுதியிற்றான் கரடிக்குகை அமைந்துளது.

இக்குகை குன்றின் உடற்பாகத்தின் மேற்குப்புறச் செங் குத்தான முகப்பில் அமைந்த இயற்கைப் பிளவாகும். இது

தரைமட்டத்திற்கு மேல் நூற்றிருபது அடியளவில் அமைந்துளது. குகைவாயிலை அடையச் சரிந்து கிடக்கும் பாறைகளால் சூழப்பட்டதும் முட்புதர்கட்கிடையே செல்வதுமான சிறு வழியாகவே சென்று ஆங்கு உருண்டு கிடக்கும் பாறைகளின் மீது தாவிச்சென்றால் குகைவாயிலை அடையவியலும்.

குகை வாயில் தெற்கு வடக்காக நீண்டுளது. அதன் இருமருங்கும் திண்ணைகளையொப்ப இரண்டு பெரிய பாறைகள் உயர்ந்து அமைந்துள்ளன. இடப்புறமாக உள்ள பாறையின் மேல் கூர்ந்து நோக்கின் கற்படுக்கையொன்று அமைக்கப் பட்டுள்ளமை தெரியும். இப்படுக்கை இடத்திலிருந்து வெளியே அடிவாரத்தை நோக்கின் அங்குள்ள எப்பொருளையும் தெளிவாகக் காணுதற்கியலும். ஆனால், அடிவாரத்திலிருந்து குகைக் பாறையின் மீதுள்ளவரை எவ்வகையினும் காணுதற்கு இயலாது. அத்தகைய அமைப்பில் அங்கு நிலவுகின்ற இருள் நிழலில், குகையின் வாயிலும் பாறையின் மீதுள்ள கற்படுக்கையும் அமைந்துள்ளன என்பதை எளிதில் அறியலாம். ஒரு



காலத்தில் இங்கு வாழ்ந்தோரால் இக்குகைப்பாதை பெரிதும் காவல் செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதைப் பாறை மீதுள்ள கற்படுக்கை எடுத்துக் காட்டுகிறது. பாறைத் திண்ணைகளின் இடையே நின்று உள்ளே நோக்கின், இருள் சூழ்ந்த புழையொன்று பாறை மடிப்புக்களின் இடையே மேல் நோக்கிக் குவிந்து செல்லுதலை அறியலாம். உள்ளே செல்ல முயலுவோர், கைகளாலும் கால்களாலும் விலங்கினம்போல் பாறைகளைப் பற்றியும் தொத்தியும் ஊர்ந்தும் மேல்நோக்கிச் செல்லுதல் வேண்டும். மாரிக்காலமாயின் மலையின்மேல் பெய்த மழையின் நீரூற்றுக்கள் இருளில் சலசலவென்று ஓடும் ஓசையைக் கேட்டலல்லது பார்த்தற் கியலாது.

குகைவாயிலின் உதட்டுயரம் எட்டடி. உள்ளே செல்லச் செல்ல முடிவில் குகையின் மேல்வாயில் ஒன்றரை அடிச்சதுரம் என்று ஓரளவிட்டுக் கூறுதற்குத் தக்க தாகப் பாறை இடுக்கு களில் அமைந்துள்ளது. இவ்வாறுள்ள குகை நூறடிகட்கு மேல் நீண்டுளது. வழியில் ஊர்ந்து செல்லுதலைத் தவிர நிமிர்ந்து செல்லுதற்கு இயலாது. எனவே குறுகிவரும் அப்புழையுள் ஊர்ந்துவரும் ஒருவர் செயலை, முன்னே சென்று மேல்வாயிலை அடைந்தவர் நோக்கின், இருளில் நிழலிடும் சிறு ஒளியில் ஊர்ந்துவரும் அவ்வுருவத்தைக் கரடியொன்று வருவ தாகவே கருதுவர். இத்தகு காட்சியினாற்றான் இக்குகை கரடிக்குகை என்று பெயர் பெற்றது போலும்! அன்றி, ஒரு காலத்தில் இக்குகையில் கரடிகள் வாழ்ந்திருந்தமையால் இப்பெயர் பெற்றும் இருக்கலாம்.

குகையின் மேல்வாயிலாகிய சிறு புழையின் வழியாக மேல்வரின், அங்கு சமபாறையோ மலை உச்சியோ இல்லை. அது மலையின் மேல் தளத்தில் இயல்பாகவே அமைந்துள்ள நெடிய கிடங்கொன்றின் அடிப்பகுதியேயாகும். இப்பள்ளம் ஏறத்தாழ இருநூறடி நீளமும், வடகோடி ஐம்பதடி ஆழ்ந்து, குறுக்களவு பதினைந்து அடிகளாக அமைந்து, உயரமும் அகலமும் தெற்கே குவிந்து சரிந்தோடி, மலையின் தென் பகுதியின் மேற்சரிவோடு மட்டமாகப் பொருந்தி விடுகின்றது. (இக்காட்சியைப் படம் 1-ல் காணலாம்) இவ்வாறுள்ள அப்பிளவில், பதினைந்தடி ஆழமுள்ள குழியிற்றான் கரடிக் குகையின் மேல்வாயில் உள்ளது. (படம்-2-ல் அம்புக்குறி காட்டுவது குகையின் மேல்வாயிற் சிறு புழையாகும்) புழை வாயிலிருந்து வெளியேறியபின் பாறைகளின்மேல் தொத்தியே மேற்றளத்துக்கு வருதல் வேண்டும்.

இவ்வியற்கைக் குகைவழியினை, அங்கு வாழ்ந்த பௌத்த சமணத் துறவிகள் மிகவும் பயனுடையதாகக் கொண்டு காத்துவந்தனர் என்பதை, வரலாற்றானும் குகையின் தலைவாயி லிலுள்ள கற்படுக்கையானும் அறியலாம்.

மலையின் மேல்தளத்திலிருந்து அடிவாரத்துக்கு வரவேண்டுமாயின், மலையின் தென்கோடி இறக்கவழியே இங்கு உள்ளதாகும். அங்ஙனம் முயன்றால் அஃது ஒரு நாழிகை வழியாக அமைந்துவிடும். அத்தொல்லையைச் சுருங்கிய காலத்தில் இலகுவில் முடிக்க, இக்குகைப் பாதை அங்கு வாழ்ந்த துறவிகட்குப் பெரிதும் பயன் பட்டுள்ளது.

(தொடரும்)

# இருமனம்

## தி. நா. அறிவு ஒளி

'இருமனம்' என்ற சொல்லாட்சியை முதல் முதலில் ஆண்ட மேதை திருவள்ளுவச் சான்றோரே.

"இருமனப் பெண்டிரும் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு" (920) என்ற அருங் குறட்பாவில் இவ்வரிய சொல்லாட்சி முதன் முதலாகக் காணப் படுகிறது. இச் சொல்லுக்கு 'இரண்டு மனம்' என்பது வெளிப்படையாகத் தோற்றும் பொருள்.

மாந்தர்க்குள் மனம் என்னவோ ஒன்றுதான். ஆனல் அதன் போக்கு ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருவகைத் தன்மையாக இருக்கிறது. இந்த இரட்டைப் போக்கைத் தான் 'இருமனம்' என்ற புதுச்சொல் குறிக்கிறது.

'இருமனம்' என்ற சொல்லுக்குக் 'கவர்த்த மனம்' எனப் பொருள் கூறிய பரிமேலழகர், விளக்கவுரையில், "இருமனம் ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தே உடைய மனம்" எனக் குறிப்பிடுகிறுர். குறளின் சொல்லுக்குப் பரிமே லழகர் கூறிய விளக்கம் மிக அருமையானது. விலை மகளிர் உடலால் ஒருவனோடு புணர்ந்தாலும்; உள்ளத்தால் புணருவ தில்லை. அம்மட்டோ! விலை மகளிர் மனம் ஓராடவனை நாடு வது உண்மையே; அவனைவிட அவன் 'பொருள்' மீதே உண்மையான நாட்டம் அவர்கட்கு அமையும். இதுதான் 'இருமன' இயல்பு.

உளநூலார் மனித உள்ளத்தை 'உள் மனம்' 'வெளி மனம்' எனப் பகுத்து ஆராய்வர். அவர்தம் ஆய்வு முறை யோடு இச் சொல்லாட்சியைப் பொருத்தி நோக்குவது ஓர் அரிய புதுநோக்காக அமையும்.

மாந்தர் உள்ளம் எப்போதும் இருநிலை இயக்கமுடைய தாக விளங்கக் காண்கிறோம். நமக்குள் நாமே இயங்கும் ஒருவகை மனநிலை ஒன்று; பிறர் முன் நாம் 'நடிக்கும்' மன நிலை மற்றென்று. 'நமக்கென்றே சில மறைவான—தனித்த—எண்ணங்கள், நடத்தைகள், போக்குகள், வாழ்க்கை முறை கள், கருத்துக்கள் ஆகியவற்றை அமைத்துக் கொள்ளும் மனி தன்; ஊர் உலகத்தின் முன்பு தன் தனியியல்புக்கு மாறுபட்ட கருத்து, எண்ணம், போக்கு, நடத்தை, வாழ்க்கை முறை ஆகியவைகளைக் கொண்டியங்குவதையும் காண்கிறோம்.

மனிதனின் சிறப்பான இயல்பாகக் கருதப்படும் 'பகுத்தறிவு' தான் 'இருமன' இயக்கத்திற்குக் காரணம் என்று கருதத் தோன்றுகிறது. பகுத்தறிவின் பயன் 'போலி நடிப்பிற்கு' வித்தா? என்ற ஐயப்பாடுகள் விளையத்தான் விளைகின்றன.

1. ஒருவரை நம்முள்ளத்தில் மிகவும் வெறுப்போம்: ஆனால் அவரை நேரில் காணும்போது மிக மகிழ்ச்சியோடு வரவேற்று, மதிப்பளித்து நட்புடையோர் போல் நடித்துப் பழகுவோம். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல்' என வடலூர் இராமலிங்க அடிகளார் குறிப்பிட்ட செயல் 'இருமன' இயல்பாகும்.

2. ஒருவன் ஒப்பற்ற—உயர்ந்த—கொள்கைகளைப் பற்றி எண்ணி—கற்று—பேசி—ஆராய்ந்து பழகுவான். ஆயின்; அவன் செயல்களோ அவனுடைய எண்ணம், பேச்சு முதலியவைகளுக்கு முற்றும் முரணுகவே அமையும். இத்தகையோரை வள்ளுவர், "ஓதி உணர்ந்தும் பிறர்க் குரைத்தும் **தான் அடங்காப் பேதையின்** பேதையார் இல்" (844) என்ற குறட்பாவில் ஓவியமாகத் தீட்டிக் காட்டிக் கண்டிப்பர்.

3. *சிலர் பேச்சு—செய்கை ஆகியவைகள் கடுமையும் கொடுமையும் வாய்ந்தவையாகத் தோன்றும். ஆயின் அன்னர் மிக இளகிய உள்ளமும் ஈரமனப்பான்மையும், அலையும் மனப்பான்மையினருமாக இருப்பர். இத்தகு நிலையினராக அரசியல் தகுதியிலுள்ளோரும், அதிகாரிகளும் இருக்க வேண்டுமென்று வள்ளுவர் கூறுவர். "கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம் நீங்காமை வேண்டு பவர்" (526) அதிகாரிகள் மிகக் கடுமையாக இருப்பதுபோல நடிக்க வேண்டும். ஆனல், உண்மையில் கெடுதி செய்யலாகாது. இப்படி வாழ்ந்தால் நிறைந்த பயன் விளையும் என்ற அறிவுரை நனி சீரியதாகும். சிலர் இந்நிலைக்கு நேர்மாருகவும் இருப்பர். வாயால் இனிக்க இனிக்க அன்புடையார்போல் பேசிக் காலம் பார்த்துக் கழுத்தை அறுத்து விடுவர். இவர்களைப்பற்றியும் வள்ளுவர்,

"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து."

"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு" (882)

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னர்
அழுதகண் ணீரும் அனைத்து, (828)

---

* இத்தகையோரைப் பற்றி வள்ளுவர்,

"அழச் சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார் நட்பாய்ந்து கொளல்" (795) என்ற குறளில் குறிப்பர்.

"மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று" (829)

"கன்வினும் இன்னாது மன்றோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு-" (819)

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்" (827) என்ற குறட்பாக்களில் குறிப்பதை ஒப்பிட்டாய்ந்துணர வேண்டும்.

4. சிலர் 'ஒன்றை' முழுமனத்தோடு விரும்புவர். ஆனால், அதனை செயற்படுத்தவோ, வெளிப்படையாகப் பேசவோ, ஏற்கவோ இயலாது 'நீர்ப்பட்ட நீந்தவறியாதான்' போல் துடிப்பார்.

இவ்வாறு பலநிலை 'இரு மனத்தினரை' நம் சூழலில் காணலாம். இருமனப் பெண்டிர் போன்றே இரு மன ஆடவரும் உளர். அன்னார்க்கும் வள்ளுவரின் தீர்ப்பு பொருந்தியதேயாம்.

'இருமன இயல்பு' மாந்தார்க்கு ஆக்கம் நல்குமா? தீங்கு பயக்குமா? என்பது ஆராய்ந் தறிதற்குரியதே.

1. இருமன அமைப்பால் அறிவின் ஆராய்ச்சித்திறன் வளர்கிறது.

2. அதேபோதில் மனிதனின் தனிவாழ்வு இரு மனப் பான்மையால் அழிகிறது.

1. இருமன அமைப்பால் மனப் போராட்டமும், வாழ்க்கைப் போராட்டமும் அமைகிறது. போராட்டமே வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், வெற்றிக்கும், முயற்சிக்கும் அடிப்படையாகும்.

2. ஆயின், சிலபலர் இப் போராட்டத்தால் மனங்குன்றி சோர்ந்து தோல்வியடைந்து வீழ்ச்சி யடைகின்றனர்.

1. இரு மனமுடைய திறமையாளர்கள் 'தன்னலம் போற்றுவதால்' சிறப்பான வாழ்வமைத்துக் கொள்கின்றனர்.

2. தன்னலத்திற்கு உதவியும் ஆக்கமும் அளிக்கும் 'இருமனம்' பிறர் நலனைக் கொடுமையாக அழிக்கிறது.

—இவ்வாறு 'ஆக்கமும் கேடும்' கலந்தே விளங்கும் இருமன இயல்பை எவ்வாறு நல்ல முறையில் பயன் படுத்துவது என்றாய்ந்து தெளிதல் அறிவுடைமையாகும்.

*இருமன அமைப்பு தவிர்க்க முடியாதது. சான்றோர்க்கும் கூட இவ்வியல்புளது. உலக வாழ்வில் பலவகை மாந்தரோடு பழகி வாழவேண்டியிருப்பதால் அவரவர் இயல்பறிந் தொழுகுதல் மக்கட்கு இன்றியமையாக் கடனாக அமைகிறது. ஆகவே அது போழ்து இருமன வியல்பே மக்கட்குத் துணையாயுதவுகிறது. இயற்கையமைப்பிலும், உலகியற்கையிலும் நேர்மறையும், எதிர் மறையும் தவிர்க்க முடியாத அமைப்புக்களாகும். உள்ளச்சான்றிலும் 'நன்மை—தீமை' என்ற இருவகை நிலைமாறு அமைப்பாகும். ஆகவே 'இருமனப் பான்மை' இயற்கையமைப்பு என்பதைத் தெளியவே வேண்டும். ஆனால் இவ் 'விரட்டை மனத்தை' நல்ல நோக்கிற்கே ஆற்றுப்படுத்த வேண்டும். ஆக்கத்திற் கென்றே அதனை ஆட்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தீமை விளையாது; நன்மை சிறக்கும். இருமன அமைப்பால் ஆராய்ச்சி ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

இருமன இயல்பால் தீயோர், வலியோரை அமைதியாக வென்று தற்காப்போடு வாழலாம். இருமனப் பான்மையால் உணர்ச்சியை ஆராய்ந்து உள்ளத்தை ஒழுங்கு படுத்தலாம்.

வடலூர் இராமலிங்க அடிகளின் 'மனுமுறை கண்ட வாசகப்' பகுதி இம்முறையில் நமக்குத் துணைபுரிகிறது. அதுபோன்றே, திருநாவுக்கரசரின் 'குலம் பொல்லேன்' எனத் துவங்கும் பாடலும் நமக்குதவும்.

தம் மனத்தைத் தாமே ஆராய்ச்சி செய்த அவ்வறிஞர்கள் அம்மனத்தின் 'இருமனத் தன்மையை' 'புதிர்க்கதிர் ஒளிப்படமாக'ப் பிடித்து அப்பாடல்களின் வழிக்கண்டு, ஆராய்ந்து; தம்முள்ளத்தின் அழுக்குகள், இழுக்குகளாகிய நோய்களைத் தெளிந்த தக்க சீர்திருத்த மருந்திட்டு மனச் செம்மை எய்தியுள்ளனர். ஆம், அத்தகு சான்றோர்கள் யாவருமே இவ்வாறு முன்னேறிப் பயன் பெற்றவர்களே. அவர்களின் அடிச்சுவட்டிலேயே நாமும் இருமனவியல்பு ஆராய்ச்சி செய்து, நம் மனத்தைச் செம்மையாக்கிச் சீர்பெற்றுய்வது நலம் பயக்குமன்றோ?

'மனக்குரங்கு' பிடிக்கடங்குவது கடினமே. அறிவு வலையால் அதனைப் பிடித்தடக்கி அதன் குறும்பையும், கொட்டத்தையும் வெல்ல வேண்டும். பகுத்தறிவு இதற்குப் பயன்படாவிட்டால் வேறு எதற்கு அது பயன்பட்டாலும்; படாவிட்டாலும் ஒன்றே.

---

* வள்ளுவரே இதற்குச் சான்றாக உள்ளார்.

“கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்” (260) எனக் கூறிய அவரே,
“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்டு அதனொடு நேர்” (560) என்று கூறினார்.

இதுபோல பல இடங்களில் இருவேறுலக வியல்பினையும், இருநிலைமன வியல்பினையும் ஆய்ந்து, அதற்கிசைய குறளியற்றியுள்ளமை உணரத் தக்கது.

# தொல்காப்பியமும் தண்டியலங்காரமும்

"தமிழ்த் தும்பி"

தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூல்களுள் தற்போது உள்ளன வற்றுள் காலத்தால் முதன்மையான தாகக் கருதப்படுவது ஒல்காப் பெரும் புகழ்த் தொல் காப்பிய மேயாம். இந்நூல் அணியிலக்கணத்தை விரிவாகக் கூறவில்லை. உவமையியல் எனும் ஓரியலில் உவமையணியின் பல்வேறு நிலைகளைத் தொல்காப்பியர் கூறுகிறார். எந்தெந்த அடிப்படையில் உவமை தோன்றும் என்பதையும், எந்தெந்த உவமையுருபை எந்தெந்த வகை உவமை யணிக்குப் பயன் படுத்தல் வேண்டும் என்பதையும், எவ்வாறெல்லாம் உவமையணி செய்யுளில் வரும் என்பதையும் உவமை யியலில் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

நாட்கள் செல்லச் செல்ல அணிவகைகளும் வளர்ந்தன. அணிவகைகளைக் கூறுதற் கென்றே தனி இலக்கண நூல் தோன்றியது. தண்டியலங்காரம் அணியிலக்கணத்தைக் கூறுதற்கென எழுந்த தனிநூல். தமிழில் உள்ள தண்டியலங் காரம் வடமொழியில் உள்ள 'காவியதரிசனம்' என்பதன் மொழி பெயர்ப்பு. இந்நூலுள் பொருளணியியலில் முப்பத் தைந்து அணிகள் கூறப்படுகின்றன. தொல்காப்பியத்தில் இத்துணை அணிகள் கூறப்படவில்லை. தண்டியலங்காரத்தில் கூறப்படும் அத்துணை அணிகளையும் புதிதாக முதன் முதலில் கூறியவர் அந்நூலாசிரியர் தான் என்று கூறுதற்கில்லை. தொல் காப்பியர் காலத்திலிருந்து சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று வந்த அணியிலக்கணம் தண்டியலங்காரம் தோன்றிய காலத்தில் அணிகள் முப்பத்தைந்தாக விளங்கியிருத்தல் வேண்டும் என நம்ப இடமுள்ளது.

"As Bhamaha gives more than twenty eight figures, Tivakaram which gives no more than twenty eight, may be taken to represent a stage earlier than that of Bhamaha என்றும், "Probably the second and third groups of Bhamaha appear as the second group in Tivakaram; but 'Yathasankya' does not appear in Tivakaram, which probably following the traditions of Tolkapiyam books upon it as a special kind of prosodial patterning rather than as a specific figure of a Tamilian or Southern School of Rhetorics distinct from that of Bhamaha and others,

The first two groups exhaust fourteen figures, leaving only fourteen for the third group in Tivakaram, whereas Bhama's last group enumerates ten more figures which may all form a further development later than that of Tivakaram. Dandin gives some more." என்றும்

"In this view of Historical development Tolkappiyam embodies a tradition earlier than that of Bharata's work, now extent" என்றும் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் A New sight from Tamil on the History fo Indian Bhetories" என்ற கட்டுரையில் கூறுகிருர். இதனின்றும் நாமறிவது தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் பரத முனிவர் காலத்திலும், திவாகர நிகண்டின் காலத்திலும், பாமகாவின் காலத்திலும் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று தண்டியலங்கார ஆசிரியர் காலத்தில் முப்பத்தைந்து அணிகளாகவும் அவற்றின் உட்பிரிவுகள் பலவாகவும் அணியிலக்கணம் வளர்ந்து விளங்கியது என்பதாகும்.

தொல்காப்பிய காலத்திற்கும் தண்டியலங்கார ஆசிரியர் காலத்திற்கும் சில நூறு ஆண்டுகள் இடைவெளி உண்டு. இந்த இடைப்பட்ட காலத்தில் அணியிலக்கணம் வளர்ந்தது. தண்டியலங்காரத்தார் தொல்காப்பியர் கூருத பல புது அணிகளைக் கூறுகிருர். ஒரு சில உவமை அணிகள் தொல்காப்பியத்துள்ளும் தண்டியலங்காரத்துள்ளும் காணப்படுகின்றன. தண்டியலங்காரத்துள் காணப்படும் ஒரு சில அணிகள் தொல்காப்பியத்திற்கு முரண்பட்டவை போல் தோன்றுகின்றன.

தொல்காப்பியர் உவமையை நான்கு பகுதிகளாகப் பிரிக்கின்ருர். அவையாவன—வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் காரணமாகத் தோன்றுவனவாம். தண்டியாசிரியர் பண்பு, தொழில், பயன் என்ற இம்மூன்று காரணங்களால் உவமை தோன்றும் என்கிருர். தொல்காப்பியர் கூறிய மெய் அல்லது வடிவுமையைத் தண்டியாசிரியர் கூறவில்லை. தண்டியலங்காரத்தின் உரையாசிரியர்.

"வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்
றன்ன பிறவு மதன்குண நுதலி
இன்ன திதுவென வரூஉ மியற்கை
என்ன கிளவியும் பண்பின் றெகையே"

என்புழி வடிவும் பண்பெனக் கூறினுர் ஆசிரியர் தொல்காப்பியனுர், என்று சமாதானம் கூறுகிருர்.

தண்டியலங்கார ஆசிரியர் தொல்காப்பியம் அறிந்தவரா அறியாதவரா யாம் அறியோம். தண்டியலங்கார ஆசிரியர் காலத்தில் தொல்காப்பிய மரபு ஒருவேளை மறைந்திருக்கலாம். அல்லது தொல்காப்பியர் கூறியதை அறிந்தும் அவருடன் உடன்படாது தான் கருதிய முறையிலே உவமையானது 'பண்பும் தொழிலும் பயனும்' என்றிவற்றின் அடிப்படையின் தான் தோன்றும் என்று கூறினரோ தெரியவில்லை. தொல் காப்பியர் கூறியதை அறிந்தும் அவர்கருத்துக்கு மாறுபட்ட முறையில் தண்டியலங்காரத்தார் கூறியிருப்பரேல் அது தொல் காப்பியத்திற்கு முரண்பட்டதேயாகும்.

"ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை" (31. தண்டி)

"ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்தலாவது—ஒரு பொருளொடு ஒரு பொருளும், ஒரு பொருளொடு பல பொருளும், பல பொருளொடு பல பொருளும், பல பொரு ளோடு ஒரு பொருளும் இயையப் புணர்த்தல்" என்று தண்டி யலங்கார உரையாசிரியர் கூறுகிறார். இக்கருத்து "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" (8. உவமையியல்) என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு முரண்பட்டுத் தோன்றுகிறது. தொல்காப்பியர் முதலொடு முதலும், முதலொடு சினையும், சினையொடு சினையும், சினையொடு முதலும் உவமையாய் வரும் என்று கூறுகிறாரேயன்றி தண்டியில் கூறப்படுவது போல் கூறவில்லை. (6. உவமையியல்)

ஒரு சாராசிரியர் கூறும் ரூபகம் சொல்லப்பட்டது-என்று இளம் பூரணர் கூறும்,

"பொருளேயுவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்" (9. உவமை)

என்ற உவமை

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்" (36. தண்டி)

என்று தண்டியாசிரியர் கூறும் உருவகத்துடன் முழுதும் ஒத்துத் தோன்றவில்லை. பொருளையே உவமையாக்கி யுரைப் பதும் உவமையே என்கிறார் தொல்காப்பியர். "உவமையாம் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும், வேறுபாடொழி வித்து ஒன்றென்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமை கொளுத்தின் அஃது உருவக மென்னும் அலங்காரமாம்" என்று தண்டியாசிரியர் கூறுகிறார். இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தோன்றுகின்றன.

தொல்காப்பியத்தில் உவமையுருபுகள் நான்கு வகையாகப் பிரித்துக் கூறப்படுவன போல் தண்டியலங்காரத்துள் கூறப்படவில்லை. தண்டியாசிரியர் உவமையுருபுகள் முப்பத்தைந்தைக் கூறுகிறார். அம் முப்பத்தைந்தனுள்ளும் தொல்காப்பியர் கூறாத பல உவமையுருபுகள் காணப்படுகின்றன. அதே சமயத்தில் தொல்காப்பியர் கூறியபல உவமையுருபுகள் கூறப்படவில்லை. தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சில உவமையுருபுகள் தண்டியாசிரியர் காலத்தில் வழக்கிழந்து போயினவோ தெரியவில்லை. தொல்காப்பியத்தைத் தண்டியாசிரியர் கற்றவராயிருந்தால் தொல்காப்பியர் கூறும் உவமையுருபுகளையும் கூறி அவற்றுடன் அவர் காலத்தில் வழங்கிய புதிய உவமையுருபுகளையும் சேர்த்துக் கூறியிருத்தல் வேண்டும். அவ்வாறு அவர் செய்யவில்லை.

சுவையணியில் எண்வகை மெய்ப் பாடுகளும் கூறப்படுகின்றன. தொல்காப்பியர் மெய்ப்பாடு ஒவ்வொன்றும் நந்நான்கு காரணங்களில் ஏதோ ஒன்றின் அடிப்படையில் தோன்றும் என்கிறார். தண்டியலங்காரத்துள் எண்வகை மெய்ப்பாடுகள் கூறப்பட்டனவே யன்றி அவை தோன்றுதற்குக் காரணமான அடிப்படைகள் என்னென்ன என்று கூறப்படவில்லை. தவிர, தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளின் பெயர்களை அப்படியே கூறாமல் வடமொழிச் சொற்களால் தண்டியலங்காரத்தில் அவை கூறப்படுகின்றன. மெய்ப்பாடுகளைப் பற்றித் தொல்காப்பியர் ஓரியல் முழுதும் கூறுகிறார். தண்டியாசிரியர் அவற்றை ஒரு நூற்பாவுள் கூறிமுடித்து விடுகிறார். மெய்ப்பாடு பற்றிய ஆராய்ச்சி தண்டியாசிரியர் காலத்தில் சிறந்து விளங்கவில்லையோ என்று ஐயுறத் தோன்றுகிறது.

தொல்காப்பியத்திற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் மேற்கோளாக் கூறிய செய்யுட்கள் பிற இலக்கியங்களினின்றும் எடுத்தாளப்பட்டவை. ஆனால் தண்டியலங்காரத்துள் ஒரு சிலபாடல்களைத் தவிர மற்ற எல்லாப் பாடல்களும் இலக்கண விளக்கத்துக் கென்றே பாடப்பட்டவை. பிற இலக்கியங்களிலிருந்து இலக்கணத்துக்கேற்ற பாடல்களை எடுத்தாளாது இலக்கண விளக்கத்துக் கென்றே புதியனவாகப் பாடல்கள் பாடப்பட்டதன் நோக்கம் தெரியவில்லை. ஒருவேளை தண்டியலங்காரத்துள் கூறப்பட்ட அணியிலக்கணங்கள் அனைத்திற்கும் பிற இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுப் பாடல்கள் கிடைக்காமல் ஒரு சிலவற்றிற்கு மட்டும் கிடைத்த காரணத்தால் உரையாசிரியர் புதுப் பாடல்களாவே பாடிவிட்டாரோ தெரியவில்லை.

# கண்ணகியின் கடுந்துயர்.

த. இராமநாத பிள்ளை, பி.ஏ. (இலண்டன்)
முதல்வர், புலோலி மாணவர் கல்லூரி, யாழ்ப்பாணம்

உள்ளத்தின்கண் நிகழும் அநுபவங்கள் உடலை மாறுதலடையச் செய்யும் என்பது உளநூற்றுணிபு. அகத்துணர்ச்சியின் பயனாக உடம்பில் வெளிப்படும் குறிகளை மெய்ப்பாடுகள் என்ப. சிலப்பதிகாரம் துன்பவியல் நாடகக் காப்பிய மாதலின், காவியத் தலைவனேனும் தலைவியேனும் துன்புறுங்கால் அவர் தம்உடலில் அவலம் மெய்ப்பாடாகத் தோன்றும். கண்ணகியின் ஆரஞர் நன்கு படம் பிடிக்கப்பட்டுள்ளதாகலின், அகத்துள்ள அழுகையைப் பளிங்கு போன்ற உடம்பு வெளியாகக் காட்டுமென எதிர்பார்க்கலாம்.

> "இளிவே இழவே அசைவே வறுமையென
> விளிவில் கொள்கை அழுகை நான்கே."

அழுகை என்னும் மெய்ப்பாடு வறுமை அசைவு இழவு இளிவு என நான்கு ஏதுக்கள் உடையதெனத் தொல்காப்பியர் கூறினர். வறுமையுற்ற போதிலும் பழைய நிலைமாறி அசைவுற்ற போதிலும் கண்ணகி அவற்றினை அதிகம் பொருட்படுத்தினாள் அல்லள். தன்கொழுநன் மாதவிபால் மயங்கி இல்லறத்திலிருந்து வழுவினானெனக் கவன்ற போதிலும் அக்கவலையை அவள் பிறருக்குக் காட்டாமல் மறைக்க முயன்றாள்,

> "சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
> குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தரு" வேறுடைப்பில்

---

84-ஆம் பக்கத் தொடர்ச்சி :—

தண்டியலங்காரத்தில் தொல்காப்பியத்திற்கு முரன்பட்ட இடங்கள் மிகக் குறைவாகவே தோன்றுகின்றன. ஆனால் தொல்காப்பியர் கூறாத பல புது அணிகளைத் தண்டியலங்கார ஆசிரியர் கூறுகிறார் என்பதை யாவரும் அறியலாம். எனவே தண்டியலங்காரம் தொல்காப்பியத்திற்கு முற்றிலும் முரண்பட்டது என்று கூறுதற்கில்லை. ஏதோ ஒருசில பகுதிகளிலேயே முரண்பாடு காணப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர்த் தண்டியாசிரியர் காலம் வரையில் வளர்ந்த அணியியலின் வளர்ச்சியே தண்டியலங்காரம் என்னலாம்.

கண்ணகி 'நலங்கேழ்முறுவ னகைமுக ங்காட்டிச் சிலம்பு கொண்' மென்புழி, அவளுடைய பெருந்தகைமையைக் காண்கின்றோம்.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த" வேறுபாடப்பில்

இருநிதிக் கிழவன் கண்டு அன்புகலந்த மொழியால் அவள் பொறையைப் பாராட்ட, அவள்தன் மனக்கவலையை இருதயத்தே மறைத்துப் பொய்ம்முறுவல் செய்தனள். கோவலன் போற்றா வொழுக்கம் மேவிய பொழுதினும் கணவனுடைய வார்த்தையைச் சிறிதும் மாற்றாத மனமுடையோளாதலின், காடுகடந்து மதுரைக்குச் செல்வதற்கு இசைந்தனள். கண்ணகியின் கவலை முகவாட்டத்தினால் வெளியானது. கோவலன் தான் செய்த தவற்றினை உணர்ந்து மனம் நொந்து கண்ணகியிடம் சென்று பொருள்தேடும் நோக்கத்துடன் மதுரை செல்வதற்கு அழைத்தானாகக் கண்ணகியின் கவலை ஒழிந்தது. காட்டுவழியில் செல்லும்போது ஆண்டு தன் பண்டைய நிலையை நினைந்து கண்ணகி வருந்தவில்லை. இழவு இளிவு என்னும் ஈரேதுக்களே உரைக்கொணாக் கவலையை வருவிக்கும். தன் கொழுநன் கள்வன் எனக் கொல்லப் பட்டான் என்பதை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் கண்ணகியின் உளத்திலே ஒழியாக்கவலை குடிகொண்டதெனலாம்.

"அரசுறை கோயி லணியார் ஞெகிழங்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே"

எனக்கேட்டுக் கண்ணகி பொங்கி எழுந்தாள் விழுந்தாள்.

"மன்பதை யலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழப்பேன்யான் அவலங்கொண் டழிவலோ"

என்பதே கற்பின் செல்வியின் கவலை; இவ்விளிவரலையும் இழத்தலையும் கண்ணகியால் சகிக்கமுடியவில்லை. "காய் கதிர்ச்செல்வனே கள்வனோ என் கணவன்' எனக்கண்ணகி பித்தேறினள் போல் வினவினள். கள்வன் அல்லன் என அறிந்தும் அவள் துயரம் ஒழிந்திலது.

"தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்"

என அற்றுழுதாள்.

கற்பின் வலிமையால் களவுப்பழியைக் களையவேண்டு மென மாதர்க்கணியாம் கண்ணகி மனத்தின்கண் உறுதி கொண்டாள்.

"காதற் கணவனைக் கண்டால் அவன்வாயிற்
றீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று
தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாளென் றெள்ள லிதுவொன்றென்
றல்லலுற் றாற்று தழுவாள்."

கணவனை எழுப்பி ஆறுதல் பெற்றும் கண்ணகியின் கவலை அகன்றிலது, 'தீவேந்தன் றனைக்கண்டு திறங்கேட்பல்யான்' என்று வழக்குரைக்கச் சென்றாள் கற்பினுக்கரசி. அரசவையில் வளையாத செங்கோல் வளைந்ததுவே எனக் காட்டிய பின்பும் கண்ணகியின் கடுந்துயர் நீங்கியதன்று.

"மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி."

அச்சமயத்தில் கண்ணகி

"வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்."

என்று விளம்பிக் கடுஞ்சினங் கொண்டு அழகர் திருவிளையாடல் புரிந்த நான்மாடக்கூடலை எரித்தற்கு அங்கி தேவனுக்கு உத்தரவு கொடுத்தாள்.

இங்ஙனம் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனை அறப்போரில் வென்று மதுரையைத் தீக்கிரையாக்கிய பின்பும் பூம்புகார்ப் பாவையின் கடுஞ்சினம் தணிந்த தொழியக் கடுந்துயர் ஒழிய வில்லை.

"காதலற் கெடுத்த நோயொ டுளங்கனன்
றூதுலைக் குருகின் உயிர்த்தனள் உயிர்த்து
மறுகிடை மறுகுங் கவலையிற் கவலும்
இயங்கலும் மியங்கு மயங்கலு மயங்கும்"

இத்தகைய கடுந்துயர மெய்ப்பாடு காட்டவல்ல தன்றாயினும் ஓரளவுக்கு காட்டுகின்றதே எனச் சொல்ல வேண்டும் துன்ப

மிகுதியாலன்றே கண்ணகி தெருவிடை அலேந்தும் முடுக்கு வழியில் நின்று கவன்றும் அங்கும் இங்குமாய் இயங்கியும் அலமந்து திரிந்தனள். பண்டைய நிலேகெட்டு அசைவுற்ற பொழுது மன்னன் 'லீயர்' தன் நன்றிகெட்ட மகளிரின் கொடுமையை நினைந்து நினைந்து பித்தேறி வருந்தர வெளியிலே மழையிலும் வெயிலிலும் அலேந்து திரிந்து வருந்தினன். தன்நண்பன் 'கென்ற்' என்பவனை அறியும் ஆற்றலின்றி வருந்தி இரங்குதற்குரியவனுயினன். ஆனல் கண்ணகி மனவுறுதியை இழந்தாளல்லள். கடவுள் நம்பிக்கையுடையவள் எனினும் தனக்கேன் இக்களேயாத்துன்பம் விளேந்ததென ஆலோசித்து மயங்கினள். மதுராபதித் தெய்வம் வந்து தோன்றிக் கோவலன் முற்பிறப்பிற் செய்த பாவத்தால் இப்பிறப்பில் உயிர் இழந்தான் எனக்கிளந்த போதிலும் சித்தம் தெளிந்திலள். தான் ஏன் இத்துயர் அடைவான் என்பதற்கு நியாயம் தெரிந்திலள். ஆகலினன்றே அவள் துயர் நீங்காமல் அலமந்து துன்புற்றனள்.

> "கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
> இருத்தலு மில்லே னிற்றலு மிலனெனக்
> கொற்றவை வாயிற் பொற்றெடி தகர்த்து."

ஏகினள் கண்ணகி. வஞ்சி செல்லும் வழியில் பதினன்குநாள் துன்புற்றலேந்தாள்.

> "இரவும் பகலும் மயங்கினள் கையற்
> றுரவுநீர் வையை யொருகரை கொண்டாங்
> கவல வென்னு ளவலித் திழிதலின்
> மிசைய வென்னுண் மிசைவைத் தேறலில்"

இவண் அவலம் உச்சநிலே அடைந்த தென்க. இரவும் பகலும் அறியாது மயங்கி ஓரிடத்து ஒதுங்கியிருந்து யோசிக்க மாட்டாமலும் ஆறியிருந்து உறங்கமாட்டாலும் மேடென்றும் குழியென்றும் தெரியாமல் அலேந்துசென்று மலே நாடடைந்தனள். அவள் ஒருவேங்கைக் கீழ்நின்று குறத்தியார்க்குத் தீத்தொழிலாட்டியேன் யான் என்று சொல்லியிருந்து பகல் கழிந்தபின், தேவர் மலர் மாரிபெய்ய, வானவூர்தி ஏறினள்.

---

# திருக்குறட் கடவுள் வாழ்த்து *


**வித்துவான் வி. மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்**

*அண்ணாமலைப் பல்கலைக் கழகம்*


தெய்வப் புலவர் திருவள்ளுவனார் எழுதிய திருக்குறளைப் பற்றியும் அதில் எழுதியுள்ள கடவுள் வாழ்த்தைப் பற்றியும் என் அறிவுக்குப் புலப்பட்டதை கூற விரும்புகிறேன். கடவுள் வாழ்த்தைப் பற்றிக் கூற வருமுன் வள்ளுவரைப் பற்றிச் சில கூறுகிறேன். வள்ளுவன் என்பதற்குப் பலர் பல காரணம் கூறுவர். வள்ளன்மை கொண்டு இயற்றியதால் வள்ளுவர் என்ற பெயர் பெற்றாரோ என எண்ணுகிறேன். திருக்குறளில் கூறியுள்ள நூற்றுமுப்பத்திமூன்று அதிகாரங்களின் தலைப்பை ஆய்ந்து பார்க்கும்போது அவையாவும் தமிழ் சொல்லாகவே புலனாகின்றது. உரையாசிரியர் உரைப்பாயிரம் என்று எழுதி, கடவுள் வாழ்த்தைப் பாயிரம் எனச் சுட்டிச் செல்கிறார்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது, அது பொருத்தமா, அல்லது பொருத்தம் அற்றதா என்ற இரு மாறுபட்ட கருத்து நிலவி வருகிறது. மேலும் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி—பகவன் முதற்றே உலகு" என்பதில் **ஆதி பகவன்** என்பதும் **உலகம்** என்பதும் வட சொல் எனச் சிலர் கூறுகின்றார்கள். உலகம் என்ற சொல் "லோகம்" என்ற சொல்லில் இருந்து வந்தது பொருத்தமா ? அடுத்து திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் முதலியவற்றைப் படிக்காதவரும் காமத்துப் பாலைமட்டும் நன்கு படிக்கின்றனர். காமத்துப் பாலில் அழகான சுவையும், காமத்தினால் பெருகின்ற இன்பமும் பரவிக் கிடக்கின்றன. "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்—ஒண்டொடி கண்ணே உள"—என்பது திருக்குறள். இப்பாட்டில் ஐம்புலன்களாலும் அறியக் கூடிய ஐந்து சுவையும் பெண்பாலின் கண் உள்ளதாக அழகாகக் கூறப்பட்டுள்ளது. எனவே பெரும்பாலோர் காமத்துப்பாலை பயிலத் தவறுவதில்லை. திருமணம் செய்யாதவர்களும், செய்தவர்களும் துன்பம் என்றே கூறுகின்றனர். திருமணம் செய்தவர்கள் துன்பத்தை அனுபவித்தாலும் அவர்கள் பெறுகின்ற இன்பத்தில் அவை மறைகின்றன. தொல்காப்பியர் "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு—அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" எனக் கூறியுள்ளார். இன்பம் பொருள் அதனால்ஏற்படுகின்ற அறம் இவற்றை அனுபவிக்க இல்லாள் வேண்டும் என்பது தேற்றமே.

---

* 29-9-60 ஆம் நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த கலைமகள் விழாவில் பேசிய சொற்பொழிவின் சுருக்கம்.

அறம் என்பதைப் பரிமேலழகர் "மனு முதலியவற்றுள் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும்" எனக் கூறியுள்ளார். பண்டைய தமிழ் நூலோர் அறம் என்பது நன்மை என்ற பொருள் பயக்கும் எனக்கையாண்டுள்ளனர். வடமொழியிலும் தமிழ்மொழியிலும் அறம் என்ருல் "இல்லாமல்போதல்" என்ற பொருளே முடிந்த முடிபாகும், அறு + அம் = அறம் என்ருயிற்று. தீமைஅற்று அதனல் நன்மை ஏற்படுவதால் அறம் என்ருயிற்று. அறு என்பதின் அடியாக அறம் வந்தது. அடுத்து செங்கோன்மை என்ற சொல்லைப் பார்ப்போம். செங்கோன்மை என்பதற்குப் பரிமேலழகர் "செவ்விய கோல் போறலிற் செங்கோல்" எனக் கூறுகின்ருர். அத்துடன் அதனை வடநூலார் "தண்டம்" என்று குறிப்பிடுவதாகவும் கூறுகிருர். இவர் கூறிய கூற்று பொருத்தமா என்பதை ஆய்வோம். ஈண்டு, கோலின் வளைவோ, அல்லது செம்மையோ வேண்டற்பாற்று? அக்கோலினுல் ஏற்படக் கூடிய வினையை நோக்கியதேயாம். அதாவது அரசன் தன் செங்கோலைக் கொண்டு தூய்மையான வினையை மேற்கொள்வதாம். வள்ளுவரும் இதற்கு விளக்கம் கூறுவதுபோல "கடிது ஓச்சி மெல்ல எறிக" என்ருர். அந்தணருக்கு முக்கோலும், உழவனுக்குத் தாற்றுக்கோலும் எவ்வாறு வினை புரிதற்குக் காரணமாக உளவோ, அவ்வாறே அரசனுக்குச் செங்கோல் தொழில் புரியக் காரணமாக உள்ள கருவி என்பதேயாம். இனி கடவுள் வாழ்த்தைப் பற்றிப் பரிமேலழகர் "எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்ருர்" என எழுதுகிருர். ஆனல் வள்ளுவர் நூல் இனிது முடிய பரிமேலழகர் கூற்றுப்படி சிந்திப்போமேயானுல் கடவுள் வாழ்த்திற்கு ஒரு பாட்டுப்போதும். ஆனல் வள்ளுவரே பத்துப் பாட்டுகள் பாடியுள்ளார். "பகவன்" என்பதற்கு பலர் பலவாறு கூறுவர். "பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சிவனே புத்தன்" என நிகண்டும் கூறுகிறது. ஆதியும், பகவனும் வடமொழிச் சொல் என்று கூறுவர். ஆனல் அது தமிழ்ச் சொல்லே அதனைப் பற்றிப் பின் கூறுவேன்.

தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இல்லை இறையனுரால் எழுதப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்ற இறையனுர் களவியல் என்ற நூலில் கடவுள் வாழ்த்து இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிலவற்றிற்குக் கடவுள் வாழ்த்து உண்டு, பலவற்றிற்கு கடவுள் வாழ்த்து இல்லை. நாலடியார், திருக்குறள், இன்னு நாற்பது போன்ற வற்றில் கடவுள் வாழ்த்து உண்டு. கார் நாற்பது, களவழி நாற்பது, ஏலாதி முதலியவற்றில் கடவுள் வாழ்த்தைக் காணேம். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டுள்ள நூல்கள் யாவும் திருக்குறளைப்

பார்த்தே கடவுள் வாழ்த்துக்கொண்டன என்று யான் கூறுவேன். திருக்குறள் எழுமுன் ஏற்பட்ட நூல்களில் கடவுள் வாழ்த்து கூருதது பண்டைய தமிழ் முறையைக் காட்டுகிறது. பிற்காலத்திலேதான் கடவுள் வாழ்த்து முறையினைக் கையாண்டுள்ளனர். வட மொழியில் பெருமைப்படத்தக்க இலக்கண நூலாக உள்ள "பாணினீயத்தில்" கடவுள் வாழ்த்து கிடையாது. "சுக்கிரநீதி" என்ற நூலில் முத்தொழில் செய்யும் கடவுளை அடைந்தவர் நன்மையடைவர் என்றே கூறப்பட்டுள்ளது. வடமொழியின் மிகப் பழைய இதிகாசம் என்று கூறப்படும் வால்மீகி இராமாயணத்தில் நூலின் முகப்பில் கடவுள் வாழ்த்துக் கூறப்படவில்லை. எனவே சமக்கிருதத்திலும் பண்டைக் காலத்தில் நூல்களின் முகப்பில் கடவுள் வாழ்த்துக் கூறும் பழக்கம் இல்லையெனத் தெரிகின்றது.

தண்டி ஆசிரியர் காலத்திலிருந்தே கடவுள் வாழ்த்து முறை கையாளப் பட்டுள்ளது "காவிய தரிசனம்" என்ற நூலில் கடவுள் வணக்கம் கையாளப்பட்டுள்ளது. தண்டியாசிரியர் கடவுள் வாழ்த்து வைத்தேதான் நூல் எழுத வேண்டும் என்ற முறையைச் சூத்திரமாக எழுதி வைத்தவர். முதன் முதலில் காப்பியத்திற்குத்தான் கடவுள் வணக்கம் வேண்டும் என ஏற்பட்டது. ஆரியரைப் பின்பற்றியே கடவுள் வாழ்த்து ஏற்பட்டது. அக்காலம் அனேகமாக 7–8 ஆம் நூற்றூண்டுகளாக இருக்கலாம். கடவுள் வாழ்த்து இருந்தால்தான் எடுத்துக் கொண்ட நூல் இனிது முடியும் எனச் செப்பிச் சென்றூர் பரிமேலழகர். ஆனல் நன்னூலில் கடவுள் வாழ்த்து இருந்தும் அது முற்றுப் பெறவில்லை. ஏழாம் நூற்றூண்டுத் தொடக்கத்தில் இலக்கண நூலுக்கும் கடவுள் வாழ்த்து ஏற்பட்டது. ஏழாம் நூற்றூண்டிற்குப்பின் சமயப் போராட்ட காலம்; அதில் சைனர், பௌத்தர் இவர்களும் கடவுள் வாழ்த்தைக் கையாண்டனர். பின்னர் சமய குரவர்களின் பாக்கள் அத்தனையுமே கடவுள் வாழ்த்தாகவே சென்றுவிட்டன. பள்ளியில் பாடம் தொடங்குவதற்கு முன்னர்க் கடவுள் வாழ்த்துப் பாடுதல் இன்றியமையாததாக ஆகிவிட்டது. தொல்காப்பியத்தில் அகப்பகுதி கூறுங்கால் முதல், கரு, உரி என வகுக்கப்படும் மூன்றனுள் முதற் பொருளாக நிலனும், பொருளும் கூறப்பட்டன. அடுத்து கருப்பொருள் கூறுங்கால் தெய்வம் கூறப்பட்டுள்ளது. காடுறை உலகத்திற்கு மாயோனும், குறிஞ்சிக்கு சேயோனும், தீம்புனல் உலகத்திற்கு வேந்தனும், நெய்தலுக்கு வருணனுமாகப் பகுக்கப்பட்டள்ளனவே அன்றி அவற்றிற்கு ஒரு வாழ்த்தோ, இல்லை. நூல் செய்யுங்கால் அவற்றை வழுத்த வேண்டும் என்று ஏற்படுத்தப்படவில்லை. "தெய்வம் அஞ்சல்" என்ற ஓர் வழக்கு உலகத்தில் உண்மையில் உள்ளது, எனவே நிலம் வகுக்கும் கால் தெய்வம் கூறப்பட்டது.

பாயிரம் என்ற சொல் தொல்காப்பியத்தில் கிடையாது. பாயிரம் என்ருல் பொருள் அடக்கம் என்று திருக்குறளில் கையாண்டுஇருக்கலாம். அல்லதுமுன்னுரைஎன்றுகையாண்டு இருக்கலாம். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் கூறவே கடவுள் வாழ்த்து ஏற்பட்டதாகும். இது இன்றியமையாததா என்பதை ஆய்வோம். இல்லறத்திற்கு உரிய சிறப்பு துறவறத் திற்கும் துறவறத்திற்குரிய சிறப்பு இல்லறத்திற்கும் உண்டு. மக்களுள் சிறந்தவர் நீத்தார். ஆகையினுலே அவர்களை முன் கூட்டிச் சிறப்பித்திருக்கிருர். அவற்றிலும் நீத்தோருள், சிறந் தோரைக் கொள்ள வேண்டும். மக்களுக்கு மழை இன்றியமை யாதது என்று வானைச் சிறப்பித்தார். உடலோடு உயிரைச் சேர்த்துவிடுவது கடவுள் ஆகையினுல் அந்த ஏற்புடைத்தாக கொள்ளலாம். “கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே” எனத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. ஆண்டு, ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற கடவுள்கள் சிறப்பிக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியத்தைப் பின்பற்றியே கடவுள் வாழ்த்து ஏற்பட்டதாம். வட நூலோர் முறைப்படி கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டதாகக் கொள்ள முடியாது. கடவுள், உயிர், உலகம் இவை மூன்றுமே தமிழன் கண்ட உண்மை, எட்டுத் தொகையில் கடவுள் வணக்க முறை திருக்குறளைப் பார்த்தே கூறப்பட்டுள்ளதாகும். எடுத்துக்காட்டாகத்திருமுரு காற்றுப்படை, பரிபாடல் முதலியவற்றைக் காணலாம். ஆனல் திருக்குறளில் மட்டும் கடவுளை வாழ்த்தும் முறை தனிப்பட்ட தாம். ஆதிபகவன் என்பது சமக்கிருதத்தைப் பின்பற்றியது அல்ல. பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினுன், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அற வாழி அந்தணன், எண் குணத்தான் என ஆண்பால் விகுதி கொடுத்துக் கூறுவதோடுமட்டும் அல்லாமல் ஒருமை யாகவும் குறிப்பிடுகின்ருர். பண்டைத் தமிழன் கடவுளை மனிதத் தோற்றத்தில் வைத்துக் காண விரும்பி ஞன். உலகம் என்பது உலகத்தில் உள்ள உயிர்களைக் குறிக்கும் மாணடிசேர்ந்தார் என்பது போன்றவை பன்மையில் கூறப்பட்டுள்ளன. திருக்குறளில் பிறப்பு இறப்பு இம்மை, மறுமை முதலியவை கூறப்பட்டுள்ளன. ஆதிபக வன் என்பதற்குப் பரிமேலழகர் கூறிய முறையைப் பார்த்தால் வள்ளுவர் தமிழராகக் காட்சியளிக்கவில்லை. திருக்குறளில் யாவும் தமிழ்ச் சொல்லாக இருக்க இதுமட்டும் எவ்வாறு வட சொல்லாகும். தொல்காப்பியத்தில் எழுத்துக்கள் உயிர், மெய் என இரண்டாகப் பகுக்கப்படுகின்றன. ஆய்தமும் ஒன்ரும். உயிர்போன்ற எழுத்து உயிரெழுத்தாம், மெய் போன்ற எழுத்து மெய்யெழுத்தாம் என்ற காரணத்தினல் தமிழ் எழுத்துக்கள் இவ்வாறு பகுக்கப்பட்டுள்ளன. உயிர்

இல்லாமல்மெய்யெழுத்துக்கள் இயங்கா. ஆகையினால்தான் "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்றார். இக் கருத்து வடமொழி இலக்கணத்தில் காண முடியாது. "குறியதன் முன்னர்—வல்லாறன் மிசைத்தே" என்ற நூற்பாக்கள் தமிழிற்கே உரியன: கணவன் தன் மனைவியை உயிரே என்கிறான். அதைப் போன்று மனைவி கணவனை உயிரே என்கிறாள். அவ்வுயிரின் மேலது கடவுளாம். எழுத்துக்களுக்கு உயிர் அகரமாம். சார்பெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்தம் ஆகியவற்றிற்கும் பிற உயிரெழுத்துகளுக்கும் உயிராக (முதலாவதாக) உள்ளது அகரம். எவ்வாறு தமிழ் இலக்கணம் அகரத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளதோ அது போன்று உலகத்திற்குத் தலைவனைக் கடவுள் கொள்ளப்பட்டார். ஆதி என்ற சொல் தமிழில் உண்டா என்பதை ஆய்வோமாக. பண்டைய இலக்கியங்களில் "ஆதி" என்ற சொல் ஆண்பாலிலும் பெண்பாலிலும் கையாளப்பட்டுள்ளது. "ஆதி மந்தியார்" என்ற பெண்பாற் புலவரைப் பற்றி சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. "ஆதி மந்தியை" "வெள்ளிவீதியார்" பாராட்டுகிறார். "வெள்ளிவீதியாரை" "ஔவையார்" பாராட்டுகிறார். எனவே, 2500 ஆண்டுகட்குமுன் ஆதி என்ற சொல் தமிழ் வழக்கில் உள்ளது என்பது வெள்ளிடைமலை. ஆதி என்பது சிறப்புப் பெயராகும், மந்தியார் என்பது இயற் பெயராகவும் இருந்தன. மந்தியார் என்பது இயற் பெயராகும். "ஆதி மந்தி போலப் பேதுற்று இனைய" என்பது அகநானூறு. ஆடல் என்ற சொல்லில் இருந்து ஆதி வந்தது எனக் கொள்வோம், ஆ+த்+அன்=ஆதன் ஆ+த்=அல்= ஆதல். மனத்தின் கண் மாசிலன் ஆதல் ஆதல் என்பது வியாங்காள் வினைமுற்று, தொல்காப்பியத்தில் ஆதி என்ற சொல் கூறப்பட்டுள்ளது. "வலிவரின் இயல்பாம்" என்ற முறைப்படி ஆதி+குறியள்=ஆதிகுறியன். மிகாது இயல்பாம் என்ற இடத்து ஆதி என்பது எடுத்துக் காட்டுக்குக் கூறப்பட்டுள்ளது. நன்னூலிலும் அவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது ஈங்கு ஆதிபகவன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொல்காப்பியச் சூத்திரத்தோடு ஒத்துள்ளது, தானம் என்பது தமிழ்ச் சொல், தாசன் என்பதும் தமிழ்ச் சொல். தா—கொடு என்ற அடிப்படையில் எழுந்தது. பகவன் என்பது சமக்கிருதத்திலிருந்து எந்த அடிப்படையில் இருந்து வந்தது என்று பார்ப்போமேயானால் பகவத்து என்பதில் உள்ள(த்)விட்டு பகவன் ஆயது, பகவான் என்பதே வடமொழி முடிபாகும். ஆனால் தமிழில் பகவன் எனக் கூறப்பட்டுள்ளது. பகவன் சூரியன்எனப் பொருள்படும். பகல்-நுகத்தடியின் நடுவில் உள்ள ஆணிக்குப் பெயர். பகுத்து என்பது பாதி. என்ற அடிப்படையில்உள்ளது. ஒருநாளின் ஒருபகுதிபகலாகும்

எனவே ஆதியை ஒருபக்கத்தில் உடையவன் (ஒரு கூற்றிலே அம்பிகையை உடையவன்) என்று பொருள்படும் ஆதிபகவன் என்ற சொல்லிற்கு, பகவன் என்பது கூறுபாடு உடையவன் எனக் காட்ட எழுந்த சொல்லாம். லோகத்திலிருந்து உலகம் என்ற சொல் உண்டாவது என்பர். அது தவறுடைத்து. தொல்காப்பியர் பன்னெடுங்காலத்திற்கு முன்பே உலகம் என்றச் சொல்லைக் கையாண்டுள்ளார். "நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்—கலந்த மயக்கம் உலகம்" என்று நூற்பா காட்டியுள்ளார்.

உலகம் என்பது உலாவுதல், சுழலுதல், சுற்றுதல், அசைதல், என்ற பொருள்படும். ஞாலம் என்பது தொங்குதல் என்ற பொருள்படும். உலகு என்பதற்கு உயிர் என்று பரிமேலழகர் கூறுகிறார். ஆடாத பொருள் உலகில்ஏதும் இல்லை. யாவும் அசையும் தன்மைத்து. எனவேதான் வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி—என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். உலகு என்பது தமிழ்ச் சொல்லேயாம். உலண்டு என்ற பூச்சிகூட உண்டு. நூலைச் சுற்றிக் கொள்ளும் தன்மையை உடையதாகலால் உலண்டு என்ற காரணப் பெயர் ஏற்பட்டது போலும். உலக்கை என்பது மேலும், கீழும் சுழலுவதால் உலக்கை எனப் பெயராயிற்று.

"தமிழ் அன்பர்களே! கடவுள் வாழ்த்துமுறை பண்டைக் காலத்தில் கிடையாது. சைன, பௌத்தர்கட்குப்பின் கடவுள் வாழ்த்து முறை வரப்பெற்றது. திருக்குறளில் கடவுள் வாழ்த்து கூறப்பட்ட முறை வேறுபட்டது எனக் கூறிவந்தேன். பத்துப் பாட்டுள் திருக்குறளைப்பின்பற்றியே கடவுள் வாழ்த்து முறை கையாண்டது என்பதையும் அறிந்தோம். அறம், பொருள் இன்பத்தை வற்புறுத்தவே திருக்குறளில் கடவுள் வணக்கம் கையாளப்பட்டுள்ளது. உயிரும் உலகமும் கடவுளுக்கு முக்கியப் பொருள் என்பதையும் அறிந்தோம். மேற்கூறிய யாவும் எனது 30–ஆண்டுகளின் ஆய்வேயாகும். இதைக் கட்டுரையாக வெளியிட எண்ணியுள்ளேன். அதை வெளிப்படுத்த வாய்ப்பளித்த கரந்தை தமிழ்ச் சங்க அன்பர்கட்கு என் நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக.

# கையறவு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நெடுநாளைய உறுப்பினரும் தமிழவேளவர்களின் மைத்துனரும் சிறந்த பொதுநல ஊழியருமான திரு. அ. சாம்புசிவம் பிள்ளையவர்கள் 18—5—61-ல் தமது 79-ஆம் அகவையில் மறைந்த செய்தியை அறிவிக்க மிகவும் துன்புறுகின்றோம்.

பிள்ளையவர்கள் தம் இளமையில் மிக்க துடிப்பும் வீர உணர்வும் அஞ்சாநெஞ்சும் உடையவராய் குதிரையேற்றம், டென்னிசுப் பந்தாட்டம், துப்பாக்கி சுடுதல், வேட்டையாடுதல் முதலிய துறைகளில்பயிற்சியும் தேர்ச்சியும் உற்று விளங்கினர்கள். சென்னை அரசினர் பொது வேலைத்துறையில் பதவி ஏற்றுத் திறம்பெற நடத்தி வந்தார்கள். 1921 ஆம் ஆண்டில் காந்தியடிகளின் கொள்கையை விரும்பித் தழுவிய அப்போதே எல்லோரும் பெரு வியப்பெய்துமாறு அரசினர் பதவியினின்றும் விலகி மேற்கூறிய விளையாடல்கள் யாவையும் துறந்து அண்ணல் காந்தியடிகளைப் போலவே இரண்டே ஆடையும் எளிய உணவும் கொண்டு கதர்வளர்ச்சி-தீண்டாமை ஒழிப்பு-மதுவிலக்கு முதலிய சமூக நலப்பணியில் ஈடுபட்டு முழுநேரத் தொண்டராய் உழைத்துத் தஞ்சையின் காந்தியார் என்று புகழுமளவிற்கு விளங்கினர்கள். சிற்றூர்களில் உள்ள மக்கள் உள்ளமும் உடலும் வளம் பெறத்தக்க வகையில் சென்று சென்று தொண்டாற்றினர்கள். மறையும் வரையில் காந்தியாரின் கொள்கைகளில் உளமார்ந்த பற்றும் உறுதியும் உடையவர்களாய் விளங்கினர்கள்.

செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் உமாமகேசுவரனுர் அவர்களின் தங்கையை மணந்த தொடர்பன்றியும் சிறந்த தமிழறிவும் தமிழ்ப்பற்றும் பண்பாடும் சான்ற மரபில் தோன்றிய காரணத்தாலும் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பணியில் ஈடுபட்டுச் சிறந்த பல செயல்களைப் பலதுறையிலும் இயற்றி வந்துள்ளார்கள்-25 ஆண்டுகட்கு முன் இவர்களின் சீரிய முயற்சியால் எழுந்து நிற்கும் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பெருமன்றமே இப்பெரியாரது சங்கத்தொண்டிற்குச் சான்ருக என்றும் விளங்கும்.

சங்கத்தில் பயிலும் சிறுவர் சிறுமியர்க்கு அவ்வப்போது காந்தியாரின் சிறந்த கொள்கைகளை எடுத்தியம்பிப் பெருமகிழ்வுறுவதோடு வார்தாத் திட்டமாகிய நூல் நூற்றல்-தேனீ வளர்ப்பு-கைக்குத்தலரிசி தயாரிப்பு முதலிய குடிசைத்தொழில்களில் தமது சொந்தச் செலவிலேயே பயிற்சியளித்துத் திக்கற்ற மாணவரில்லத்தின் கண்காணிப்பாளராகவும் விளங்கினர்கள்.

சிரித்த முகமும் திருநீற்றுப்பொலிவும் தூய உடையுமாய்த் தோன்றி இன்சொல் வழங்கி எப்பாலவரும் மகிழும் வண்ணம் விளங்கிச் சங்கப்பணிகளுக்குப் பெருந்துணையாகிநின்ற இப்பெரியாரவர்களின் பிரிவுத்துயர் தாங்கொணததாகும். அவர்தம் பேருயிர் அமைதியுறுவதாக என வேண்டுகின்ருேம்.

வள்ளுவர் வகுத்த நல்லற மகளாய் எந்நிலையிலும் பேணிப் புரந்த இவர்தம் மாட்சிசால் வாழ்க்கைத் துணைவியார் சண்பகவல்லி அம்மையாருக்கும் ஏனைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதல் கூறி எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

பொழிற்ருெண்டர்.

சித்திரை இதழின் தொடர்ச்சி

# வாழ்க்கை வரலாறு-தன் வரலாறு.

கோ. சண்முகசுந்தரம், எம். ஏ., எம். எஸ்சி.

பொதுவாக, தமிழ்மொழியில் வாழ்க்கை வரலாறு நூல்கள் அதிக அளவில் காணப்படினும் என்றென்றும் நிலேத்து நிற்கக் கூடிய சிறப்பினே உடைய நூல்கள் சிலவே. இதற்குக் காரணம் நூல் எழுதுவோரில் பலர் அதற்குமுன் எழுதப்பட்ட சில நூல்களே மட்டுமே படித்து அதன் சாரத்தைத் தருவதோடு அமைவதே யாகும்; நூல் தலேவரது வாழ்க்கையில் ஈடுபாடுகொண்டு அவரைப் பற்றிக் கிடைக்கும் செய்திகளேயெல்லாம் முயன்று தொகுத்து உயி ரோட்டமுடைய நூலாக உருவாக்குவதற்கான உழைப்பு வளர வேண்டும்.

தமிழ்நாட்டில் வாழ்க்கை வரலாறுகளும் தன் வரலாறுகளும் சிறந்து அமைவதற்கு நாம் செய்யவேண்டியன: புகழ் படைத்தோர் களோடு உடனிருந்து பழகும் வாய்ப்பு கிடைக்கப் பெற்ருேர் அவர் களது கூட்டுறவில் தாம் அறிய நேர்ந்த செய்திகளேக் குறித்து வைத்திருத்தல் வேண்டும்; அதுவன்றி இளமைப்பருவம் முதலான பழைய செய்திகளேயும் அவர்களிடமிருந்தே கேட்டறிய முயல வேண்டும்; புகழ்ச் செல்வர்களது கடிதங்களேப் போற்றிப் பாதுகாத் தல் வேண்டும்; புகழ்ச் செல்வர்களது குடும்பத்தினர், அவர்களுக்கு வந்த கடிதங்கள், நாட்குறிப்புகள், நூல்கள் ஆகியவற்றைக் காத்தல் தமிழுக்குச் செய்யும் தொண்டாகும். பின்னர் வாழ்க்கை வரலாறு எழுதுதற்கு இவை உறுதுணேயாமாதலால். நாட்குறிப்பு எழுதும் வழக்கம் தமிழ்நாட்டில் அதிகம் இல்லேயே என்பதும் இரங்குதற் குரியது.

சான்ருேர்களுக்கு தன்வரலாறு எழுதும் எண்ணம் தாளுகவே எழுவதில்லே; அன்பர்கள், மாணவர்கள் தூண்டுதலின் பேரிலேயே அவர்கள் எழுத முனேவார்கள். இந்த வகையில், திரைப்பட இதழ்களின் ஆசிரியர்களின் தூண்டுதலேப் போல பிற துறைகளி லும் தூண்டுதல் இருக்குமேயாளுல் எத்தனேயோ சிறப்பான தன் வரலாறுகள் தமிழகத்துக் கிடைக்குமே !

( உரிமை ஆசிரியர்க்கு )